மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) கீழ் பவானி ஆயக்கட்டிற்கு தண்ணீர் விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும், அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ் பவானி ஆயக்கட்டிற்கு குறித்த காலத்தில் தண்ணீர் சரிவர விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருமதி சுப்புலட்சுமி. அவர்கள் இருக்கையில் இல்லை. அடுத்து, திரு. சு.முத்துசாமி.

திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ் பவானி ஆயக்கட்டிற்கு குறித்த காலத்தில் தண்ணீர் சரிவர விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்தும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, இந்தப் பொருள் பற்றி, ஏற்கனவே 25-ம் தேதி கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள் என்று சொல்லி இருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஆர். கே. எஸ். தண்டபாணி, துரை ராமசாமி ஆகியோரும் இதே பொருள் குறித்து, 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுடைய பெயர்களும் சேர்த்துக்கொள்ளப் படும். அமைச்சரவர்கள் பதில் சொன்ன பிறகு, வேண்டுமானால் கேள்விகள் கேட்கலாம்.

திரு. ஆ. நடராசனுடைய பெயரையும் சேர்த்து விட்டேன்; வேண்டுமானால், ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

348 கீழ் பவானி ஆயக்கட்டிற்கு தண்ணீர் விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனுல் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து

[1977 ஆகஸ்ட் 3

* திரு. மு. கருணாநிதி : ஒரு ஒழுங்குப் பிரச்னையை நான் எழுப்ப விரும்புகிறேன். இதே, கீழ் பவானி பாசன வாய்க்காலில் நீர் விடுவது சம்பந்தமாக சட்டமன்றப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அறிவிப்பு என்ற தலைப்பில் மாண்புமிகு உறுப்பினர் பேரூர் தொகுதியைச் சேர்ந்த நடராசன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அளித்திருந்தார். அதற்கு செயலாளரிடமிருந்து வந்துள்ள பதிலில் மேற்கண்டுள்ள பொருள்பற்றி நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அல்லது மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு இருப்பதால், சட்டமன்ற விதிகளின் 41-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தங்களது அறிவிப்பிற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி மறுத்துள்ளார் என்று அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனல் அதே விஷயம் பற்றி மற்ற உறுப்பினர்களுக்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை பாரபட்சமாக நான் கருதவில்லை. தவறு நடந்திருக்கிறது, திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவற்றிற்கு காலையில் நோட்டீஸ் கொடுக்கும்போது, இந்தமாதிரி நிலை ஏற்படாதிருக்க செயலாளருக்கும் எல்லோருக்கும் அறிவுரை தந்திருக்கிறேன். எந்த ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும், ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் நன்ருக வரிசைப்படுத்தி, எதெதெற்கு அனுமதி கிடைத்திருக்கிறது, மறுக்கப்பட்டிருக்கிறது என்று என்னுடைய பார்வைக்கு வைக்க வேண்டுமென்று கூறி இருக்கிறேன். இப்படிப் பட்ட தவறுகள் இனி நடைபெருதபடி நான் பார்த்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பவானிசாகரிலிருந்து முதல் சுற்றுத் தண்ணீர் இயல்பாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் திங்கள் 15-ம் தேதியில் விடப்படும். முதல் சுற்றுத் தண்ணீர் விட சுமார் 24 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர் தேவைப்படும். இந்த நீர்த்தேக்கத்தில் சுமார் 20 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர் இருப்பு இருக்கும் போதுதான் இயல்பாக விவசாயத்திற்காகத் தண்ணீர் விடப்படும். தற்போதைய இருப்பு 8 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர். தென்மேற்கு பருவ மழை பவானியின் நீர் பிடிப்பு பகுதியில் தாமதித்து பெய்வதால் நீர்த்தேக்கத்தில் நீர் வரவு அண்மைக் காலம் வரையில் மிகக் குறைவாக இருப்பினும் கடந்த சில நாட்களாக நீர் வரவில் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. மேலும் தண்ணீர் வருவதற்கான அறிகுறிகள் ஊக்கமூட்டுவதாக இருக்கின்றன. தண்ணீர் வரத்து நிலைமை மிகவும் உன்னிப்பாகச் சவனிக்கப்பட்டு வருகிறது. இப்போதைய போக்கு தொடருமானல் நீர்த்தேக்கத்தை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 15-ம் தேதியிலேயே திறந்து விட இயலும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னுர்கள், ஆகஸ்ட் 15-ம் தேதி வாக்கிலே தண்ணீர் விடப்படலாம் என்று கருத்துத் தெரிவிக்கிருர்கள். பொதுவாக, விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடும்போது, முன் கூட்டியே 15 நாள், 20 நாட்களுக்கு முன்னுலேயே பத்திரிகையிலே செய்தி கொடுத்து அறிவிப்பது வழக்கம். அதுபோல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரை, ரேடியோ மூலமும், பத்திரிகை செய்தி மூலமும், அரசாங்கக் குறிப்பு மூலமும் தண்ணீர் திறந்து விடப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே நோட்டீஸ் என்ற முறையிலே அறிவிப்பு கொடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமே போதுமானது.

(ஆ) பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் அங்குள்ள கட்டடங்கள் பாழ்பட்டுப் போகாமல் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பால் அங்கு கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணு சுற்றுலா மாளிகை, சிலப்பதிகார கலைக் கூடம், நெடுங்கல் மன்றம், 400-க்கும் மேற்பட்ட மீனவர் குடியிருப்புகள் கடல் அரிப்பால் பாழ்பட்டுப் போகாமல் தடுத்திட தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு பிரச்சினையைப் பரிசீலிப்பதற்கென இப்பகுதியின் நீர், மற்றும் நில அமைப்பு, கடற்கரையின் மாறுபாடுகள், காற்று, அலை மற்றும் அலை ஏற்றங்கள் ஆகியவற்றினைக் குறித்து திட்டவட்டமாக ஆய்வு செய்து விவரங்களைச் சேகரித்திட அரசு ரூ. 15,000 செலவு செய்ய 1976 சனவரி திங்களில் ஒப்புதலளித்துள்ளது. தல ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. அவற்றின் முடிவுகள் தெரிந்தபின் அதனடிப்படையில் கடலரிப்புத் தடுப்புக் கட்டுமானங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. எஸ். கணேசன் : கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மீனவர்கள் துயரைத் துடைப்பதற்காகவும், இலக்கியச் செல்வங்களைப் பாதுகாப்பதற்காகவும் ஒரு விரிவான திட்டம் ஆய்வில் இருந்ததே, அந்தத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.